"நான் உனக்கு முன்னே போய்... I will go before thee, "

Praise the Lord: Let us Pray.

ஏசாயா/Isaiah 45:2 (பக்கம் 851)

நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்.
I will go before thee, and make the crooked places straight: (KJV)
I will go before you and level the mountains [to make the crooked places straight]; (AMP)

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. (யோசு. 1:5)
I will be with you; I will never leave you nor forsake you.
நான் மோசேயோடே இருந்ததுபோல உன்னோடும் இருக்கிறேன்.... (யோசு. 3:7)
I am with you as I was with Moses.
நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன்: திகையாதே நான் உன் தேவன்:
நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்:
என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத்தாங்குவேன். (ஏசா. 41:10)
So do not fear, for I am with you; do not be dismayed, for I am your God.
I will strengthen you and help you; I will uphold you with my righteous right hand.

*(நானும் தேவனும்....என்பதை குறிப்பாக தியானியுங்கள்....)*

பழைய ஏற்பாட்டிலே கர்த்தர் தெரிந்தெடுத்த பலர், இப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தினாலே உற்சாகத்தோடு மன்றாடி ஜெபித்தார்கள். கர்த்தரிடமிருந்து வல்லமையை பெற்றார்கள்.

அவர்களைவிட நாம் இன்னும் அதிக உற்சாகத்தோடு மன்றாடி ஜெபிக்கவும் வல்லமையை பெற்றுக்கொள்ளவும் முடியனும்.

பழைய ஏற்பாட்டிலே....
ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் **பேசினார்**; ....(**யாத் 33:11**)
The LORD would speak to Moses face to face, as one speaks to a friend. …
ஏனோக்கு தேவனோடே **சஞ்சரித்**துக்கொண்டிருந்தார்... (**ஆதி 5:24**)
Enoch walked faithfully with God; ….

கர்த்தர் சோதோம் கொமோராவை அழிப்பதுபற்றி ஆபிரகாமோடு பேசினபோது....
ஆபிரகாம் **சமீபமாய்ச்** சேர்ந்து: கர்த்தரிடம் பல கேள்விகளைக் கேட்டதையும...:.
கர்த்தர் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு போய்விட்டார்; ஆபிரகாமும் தன்னுடைய இடத்துக்குத் திரும்பினான்.
என்றும் **ஆதியாகமம் 18ம்** அதிகாரத்தில் வாசிக்கலாம்.
When the LORD had finished speaking with Abraham, he left, and Abraham returned home.

மோசே சொல்கிறார்:
நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு **சமீபமாய்**ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? (உபா 4:7)
What other nation is so great as to have their gods near them the way the LORD our God is near us whenever we pray to him?

*இந்த வசனங்களையெல்லாம் நீங்கள் மீண்டும் மீண்டும் தியானித்துப்பார்த்தால்.....*
பழைய ஏற்பாட்டிலே இவ்வளவு சமீபத்திலே இருந்தவர்,
புதிய ஏற்பாட்டிலே நமக்குள்ளேயே வாசம் செய்கிறார்...என்று உணரும்போது, அவர்களைவிட நாம் இன்னும் அதிக உற்சாகத்தோடு மன்றாடி ஜெபிக்கவும் வல்லமையை பெற்றுக்கொள்ளவும் முடியனும்.

சகலமும் பரிபூரணமாக வாசம் செய்யும் கிறிஸ்து நமக்குள் வாழ்கிறார்.
அவர் கொடுக்கும் பெலத்தினாலே, அவர்மூலமாகவே நாம் தேவனை நோக்கி ஜெபிக்கிறோம்.
அவரே நம் விண்ணப்பங்களுக்கு பதிலை தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொடுக்கிறார்.
இதிலே நம்முடைய பெலம் எதுவுமில்லை என்பதை நாம் வசனத்தின்மூலமாக அறிந்திருக்கிறோம்.
இதை நாம் மறக்காமல் நினைவில் கொண்டால், நாம் ஜெபிப்பதிலே எந்த தடையும் இருக்காது.

கொலோசெயர்/Colossians 1:27-29 (பக்கம் 275)

புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக **உங்களுக்குள்** இருப்பதே அந்த இரகசியம்.

எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்.

அதற்காக நான் **எனக்குள்ளே** வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற **அவருடைய பலத்தின்படி** போராடிப் பிரயாசப்படுகிறேன்.

To them God has chosen to make known among the Gentiles the glorious riches of this mystery, which is Christ in you, the hope of glory. He is the one we proclaim, admonishing and teaching everyone with all wisdom, so that we may present everyone fully mature in Christ. To this end I strenuously contend with all the energy Christ so powerfully works in me.

*இந்த வசனம் நம் ஒவ்வொருவர் இருதயத்திலும் ஜீவித்து வளர கர்த்தர் கிருபை செய்வாராக.*

**"நான் உனக்கு** முன்னே போய்..", என்று வாக்குக்கொடுத்தவர் இன்று நமக்குள்ளேயே வாசம் செய்கிறார். பிறகு ஏன் நாம் கவலைப்படவேண்டும்?

தேவன் நம்மீது வைத்துள்ள மாறாத அன்பை நினைத்து உற்சாகமடையுங்கள். அப்படி உற்சாகமில்லாதவர்களுக்காக, நம்மோடு வாசம் செய்யும் கிறிஸ்துவின் மூலமாக தேவனிடம் மன்றாடுங்கள்.

உங்களில் இரண்டு பேர் **தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற** எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே **ஒருமனப்பட்டிருந்தால்**, பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். (மத் 18:19-20)

"Again, truly I tell you that if two of you on earth agree about anything they ask for, it will be done for them by my Father in heaven. For where two or three gather in my name, there am I with them."

இயேசு கிறிஸ்து நம் மத்தியிலும் நமக்குள்ளும் வாசம் செய்கிறவர் சொல்கிறார்.....
பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும

1 யோவான்/1 John 4:16 (பக்கம் 329)

தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் **அன்பாகவே** இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், **தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.** (1யோவா 4:16)

And we have known and believed the love that God hath to us. God is love; and he that dwelleth in love dwelleth in God, and God in him. (KJV)

*(தேவன் நம்மிலே நிலைத்திருக்கிறார்...)*

யோவான்/John 15:4 (பக்கம் 150)

என்னில் நிலைத்திருங்கள், **நானும் உங்களில் நிலைத்திருப்பேன்;** (யோவான் 15:4)

Remain in me, as I also remain in you. ....

*(கிறிஸ்து நம்மிலே நிலைத்திருக்கிறார்.....)*

1 கொரிந்தியர்/1 Corinthians 15:10 (முதல்பகுதி மட்டும்) (பக்கம் 242)

நான் அல்ல, **என்னுடனே இருக்கிற** தேவகிருபையே அப்படிச் செய்தது.(1கொரி 15:10)

.....yet not I, but the grace of God that was with me.

*(தேவனுடைய கிருபை நம்மோடிருக்கிறது....)*

கலாத்தியர்/Galatians 2:20 (பக்கம் 259)

இனி நான் அல்ல, **கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்**; (கலா 2:20)

I have been crucified with Christ and I no longer live, but Christ lives in me.

*(கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாக இருக்கிற நம்மிலே கிறிஸ்துவே வாழ்கிறார்.....)*

2 தீமோத்தேயு/2 Timothy 1:14 (பக்கம் 291)

உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை **நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே** காத்துக்கொள். (2தீமோ 1:14)

Guard the good deposit that was entrusted to you—guard it with the help of the Holy Spirit who lives in us.

*(கிறிஸ்து கொடுத்த ஜீவனைக் காத்துக்கொள்ள, ஆவியானவராக கிறிஸ்துவே நமக்குள் வாசம்பண்ணி உதவுகிறார்.....)*

நாமும், பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரும் எவ்வளவுக்கு ஒன்றியுள்ளோம் என்பதை **இவ்வசனங்கள் மூலமாக** நாம் நன்றாக அறிந்துள்ளவர்கள். அதனால்தான் ஒவ்வொரு ஆராதனையிலும், **வேதப்படிப்பிலும்** கலந்து, நமக்குள்ளே வார்த்தையாக வாசம் செய்யும் கிறிஸ்துவை மேலும் மேலும் அறிந்து கொள்ள வாஞ்சையாயிருக்கிறோம்.

லூக்கா/Luke 8:15 (பக்கம் 91)
நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்.
But the seed on good soil stands for those with a noble and good heart, who hear the word, retain it, and by persevering produce a crop.
(ஜீவனுள்ள வசனம் நம் இருதயத்திலே ஜீவிக்கும்போது பலன் கொடுக்கிறது.)
யோவான்/John 15:7 (பக்கம் 150)
**நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும்** நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். (யோ. 15:7)
If you remain in me and my words remain in you, ask whatever you wish, and it will be done for you.
(நாம் அனைவரும் கிறிஸ்துவோடு இருக்கிறோம். நமக்குள் கிறிஸ்து இருக்கிறார்.)

இப்படிப்பட்ட கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப்பிரிப்பவன் யார்? என்ற கேள்விக்கு ஒரு பட்டியலே கொடுத்து…எதுவும் பிரிக்கமாட்டாது என்று நிச்சயத்துமிருக்கிறேன் என்ற ரோமரிலே உள்ள வசனத்தின்படியே, நாம் கிறிஸ்துவின் அன்பை உணர்ந்தவர்களாக நாம் இங்கே ஒன்று கூடியிருக்கிறோம். ஆமென்.

ஆதாம் - ஏவாள் குறித்து தேவன் ஒரு காரியத்தை சொன்னார்:
இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். (ஆதியாகமம: 2:21-24)
That is why a man leaves his father and mother and is united to his wife, and they become one flesh…
வேதத்தின் பழைய ஏற்பாட்டு முதல் புத்தகத்திலே,
கணவன்-மனைவி 2 பேராக இருந்தாலும், அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். என்று சொன்னார்.
இந்த தேவகட்டளையை நாம் நிறைவேற்ற நமது இருதயத்தின் பக்குவம் மிக முக்கியம்.

இதேவசனத்தை புதியஏற்பாட்டிலே முதலாவது புத்தகத்திலே,
மத்தேயு/Matthew 19:5-6 (பக்கம் 28)
இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; **அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்** என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா?
இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் **இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்**; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.
and said, ‘For this reason a man will leave his father and mother and be united to his wife, and the two will become one flesh’? So they are no longer two, but one flesh. Therefore what God has joined together, let no one separate.”

இருவராயிருக்கிறவர்கள் **இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்**; என்று சொன்னால், நமக்குள்ளேயே வாசம் செய்கிற தேவனும் நாமும் எப்படி இருக்கிறோம் என்று நீங்கள் தியானித்தால் உங்களை எந்த சூழ்நிலைகளும் அசைக்கமுடியாது. ஆமென்.

**"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும்"**…..என்று சொன்ன கிறிஸ்து….
நம் மத்தியிலும் இப்போ இருக்கிறார். நமக்குள்ளும் என்றென்றும் வாழ்கிறார்.

மேலும் தியானித்துப்பாருங்கள்…

திருக்குள்ளதும் மகாகேடுள்ளதுமான நம் இருதயம் தேவகட்டளைகளை நிறைவேற்றாது போய்விடுமே என்றறிந்த நம் ஆண்டவர் நம் முழுஇருதயத்தையும் அவருக்கு கேட்கிறார். (மத்.22:37-38)
(The heart is deceitful above all things, and desperately wicked: )
அப்படி நம் முழு இருதயத்தையும் அவருக்குக் கொடுக்கும்போது,
அவர் தேவனாக, கிறிஸ்துவாக, பரிசுத்த ஆவியானவராக நமக்குள் முழுமையாக வாசம் செய்து, நம்மை ஆட்கொண்டு, மற்ற எல்லா தேவையில்லாத காரியங்களையும் நம் இருதயத்திலிருந்து அகற்றி அவரே பரிபூரணமாக வாசம் செய்வார்.

இப்படி நம்மை தேவன் வழிநடத்திவருகிறர் என்ற விசுவாசத்தை வளர்த்துக்கொள்வோம்.
இந்த உலகத்தின் காரியங்களுக்கும், மனிதனின் மாம்ச எண்ணங்களுக்கும்-செய்கைகளுக்கும் ஒருபோதும் கலங்காமல்.
ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.
Do not be anxious about anything, but in every situation, by prayer and petition, with thanksgiving, present your requests to God.
என்ற வசனத்தின்படியே நாம் கர்த்தரிடம் மன்றாட ஆயத்தத்தோடும். உற்சாகத்தோடும் ஒருமனதோடும் எழுந்து நிற்போம். ஆமென்.

**"நான் உனக்கு** முன்னே போய்..", என்று வாக்குக்கொடுத்தவர் ...
நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் **நமக்குள்ளே கிரியைசெய்கிற** வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு ஸ்தோத்திரம், எபே 3:20
Now to him who is able to do immeasurably more than all we ask or imagine, according to his power that is at work within us,

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.
For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross. (கொலோசெயர் 1:19-20)
தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். "For God so loved the world that he gave his one and only Son,[a] that whoever believes in him shall not perish but have eternal life. (யோவான்/John 3:16)

Let us Pray